# DEPOSITION OF WITNESS

## IN THE COURT OF PRINCIPAL SESSIONS JUDGE, SALEM.

S.C.No.259/2023

Deposition of witness – PW-5

| | | | |
|---|---|---|---|
| Name | : மூர்த்தி | Caste | : |
| S/o. | : சின்னன்னன் | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

Solemnly affirmed on 11.11.2025 in accordance with the provisions of Oaths Act No.44 of 1969.

Accused present.

<u>முதல் விசாரணை :</u>

நான் ராமிரெட்டிப்பட்டி கிராமம் ஆரூர்பட்டியில் குடியிருக்கிறேன். நான் நெசவு தொழில் செய்து வருகிறேன். 01.09.2023ம் தேதி காலை கிணற்றிலுள்ள நீரை இறைப்பதற்காக என்னை அழைத்ததன் பேரில் நான் கருக்குப்பட்டிக்கு சென்று குமார் என்பவருக்கு சொந்தமான நிலத்திலுள்ள கிணற்றுக்கு சென்றேன். கிணற்றில் ஒரு பிரேதம் இருந்தது. நான் கிணற்றிலிருந்த நீரை மோட்டார் வைத்து இறைத்துவிட்டேன். பின் கிணற்றுக்குள் கை, கால்கள், உடல் துண்டு

துண்டாக வெட்டப்பட்டு ஒரு பிரேதம் கிடந்தது. அந்த இடத்தில் போலிசார் என்னிடம் கையெழுத்து வாங்கினார்கள். பிரேதம் கிடந்ததற்காக என்னிடம் கையெழுத்து வாங்கினார்கள். என்னிடம் காண்பிக்கப்படும் பார்வை மகசரில் உள்ள முதல் கையெழுத்து என்னுடையதுதான். என்னுடன் வைத்தி என்பவரும் கையெழுத்து செய்தார். பார்வை மகசரில் உள்ள என்னுடைய முதல் கையெழுத்து அ.சா.ஆ.2 ஆகும். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

அரசு தரப்பு வழக்கறிஞர் சாட்சியை பிறழ் சாட்சியாக கருத அனுமதி கோரி, குறுக்கு விசாரணை செய்ய அனுமதி அளிக்கப்பட்டது.

<u>அரசுத்தரப்பில் குறுக்கு விசாரணை</u> :

போலிசார் என்னை விசாரித்தபோது பிரேதம் கிடந்த கிணற்றையும் அதன் சம்பவ இடத்தை என் முன்னிலையிலும் என் கூட இருந்த வைத்தி முன்னிலையிலும் போலிசார் பார்வையிட்டு தயார் செய்த பார்வை மகசரில் நானும் வைத்தியும் சாட்சிகளாக கையெழுத்து போட்டோம் என்று வாக்குமூலம் அளித்தேன் என்றால் சரி. நான் சொன்ன சங்கதிகளைதான் போலிசார் எழுதிக்கொண்டு என்னிடமும் வைத்தியிடமும் கையெழுத்து வாங்கினார்கள் என்றால் சரி. என்னிடம் காண்பிக்கப்படும் பார்வை மகசரில்தான் நானும் வைத்தியும் கையெழுத்து செய்தோம் என்றால் சரி.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை – இல்லை.

Sd/- S.Sumathy,

Principal Sessions Judge, Salem.